# Usage of Sinhala Language - Problems and Solutions: Faculty of Islamic Studies &Arabic Language (South Eastern University of Sri Lanka) as a Sample

M.N.F. Nasreena[1], M.I. Infaz ahammed[2] & A.R.M. Mahsoom[3]

[1] Department of Islamic studies, [2] Department of Arabic Language, [3]Assistant Lecturer (Linguistics & Translation) Department of Arabic language
Faculty of Islamic Studies & Arabic Language, South Eastern University Of Sri Lanka
nasreena.nawshaddeen@gmail.com, infazahamed420@gmail.com, mahsoomzahry92@gmail.com

## Abstract

Language impacts the daily lives of memories of a race, creed and region of the world. Language helps, express our feelings, desires and queries. To the world around us. There are 7102 languages around the world. In these languages some of them are official language in their country. According to this, in our country Sinhala is the national language. The primary objective of the study is finding problems among student's usage Sinhala language. The sample of the study based on faculty of Islamic studies and Arabic language, south eastern university of Sri Lanka. The data was collected from primary sources such as interview, questionnaires and observation with the secondary sources such as researches. The finding of the study is that, most of the students are poor in Sinhala language. Because they haven't got the suitable environment another reason was that they had no relationship with other communities. The outcome of study will help to improve Sinhala language in this faculty.

**Keywords:** Language, Usage, Problems, Solutions, Official language

## அறிமுகம்

தகவல்களை பரிமாற்றம் செய்வதற்காக மனிதன் பயன்படுத்துகின்ற ஒரு ஊடகமாக மொழி காணப்படுகின்றது. மேலும் சிக்கலான தொடர்பாடல் முறைகளைப் பெறுவதற்கும் பயன்படுத்துவதற்குமான வல்லமை ஆகும். ‘‘மொழி உணர்வுகளில் இருந்து தோற்றம் பெற்றதாக கூறுகிறார்’’ (ரூசோ). ‘‘மொழி என்பது வரலாற்றின் ஆவணக் காப்பகம் ஆகும்’’ (*Ralph Waldo Emerson).* உலகளாவிய ரீதியில் சுமார் 7102 மொழிகள் காணப்படுகின்றன. இவற்றில் பல மொழிகள் தத்தமது நாடுகளில் அரச மொழியாக பேசப்படுகின்றன.

இலங்கை நாடானது 1948ம் ஆண்டில் ஆங்கிலேயரிடமிருந்து சுதந்திரம் பெற்றதிலிருந்து மொழியின் பிளவு காரணமாக பல பிரச்சினைகள் தோன்றியது. இதனால் 1987ம் ஆண்டு அரசியலமைப்பின் 13வது திருத்தத்தில் உத்தியோகப் பூர்வ மொழியாக சிங்களம்

பிரகடனப்படுத்தப்பட்டது. எனவே அரச கரும மொழியாக சிங்களம் காணப்படுகிறது. 1987 தொடக்கம் இன்று வரைக்கும் நிலைத்து நிற்க்கக் கூடிய மொழியாக சிங்கள மொழி காணப்படுவதோடு பல்லின மக்கள் பல மொழி பேசக் கூடியவர்களாக இருப்பினும் சிங்கள மொழியை அதிகம் பேசக் கூடியவர்களாக இலங்கை மக்கள் காணப்படுகின்றார்கள். எனவே சிங்கள மொழி அரச கரும மொழியாக மட்டுமல்லாமல் இலங்கையில் அன்றாட தேவைகளை நிவர்த்தி செய்து கொள்வதில் சிங்கள மொழி முக்கியத்துவம் வகிக்கிறது. மேலும் ஏனைய எந்த மொழியை தாய் மொழியாக கொண்டிருப்பினும் இலங்கையை பொறுத்த வரையில் இரண்டாம் மொழியான சிங்களத்தை கற்பது அத்தியவசியமாக காணப்படுகிறது. அந்த வகையில் இரண்டாம் மொழி சிங்களம் கற்றல் என்பது பாடசாலை தொடக்கம் பல்கலைக்கழகம் வரை வியாபித்துள்ளது. இவ்வாறு இருக்கும் சமயத்தில் தமிழ் மொழியிலான பட்டம் வழங்க கூடிய இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழிப் பீடத்திலும் இரண்டாம் மொழியாக சிங்களம் கற்றல் ஒரு பாடநெறியாக காணப்படுகிறது.

இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழிப் பீடமானது இலங்கை தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் அமையப்பெற்றுள்ளது. இப் பல்கலைக்கழகமானது 1995ம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இது அம்பாறை மாவட்டத்தில் ஒலுவில் பிரதேசத்தில் அமைந்துள்ளது. 6 பீடங்களை உள்ளடக்கிய பல்கலைக்கழகமாக இலங்கை தென் கிழக்குப் பல்கலைக்கழம் காணப்படுகிறது. அதில் இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழிப் பீடமானது 2005ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இங்கு இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழித் துறைகள் என்று இரண்டு துறைகள் காணப்படுகின்றன. இங்கு பெறும்பான்மையாக முஸ்லிம்கள் கல்வி கற்கின்றனர். இப்பீடத்தில் தமிழ் மொழியே அதிகமாக உபயோகிக்கின்றனர். இவ்வாறு காணப்படும் சூழ்நிலையில் இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழிப் பீடத்தில் 2ம் வருடத்தில் 2ம் பருவத்தில் ஓர் தெரிவுப்பாடமாகவும், 2 (Credit) கொண்ட பாடமாகவும் சிங்கள மொழி காணப்படுகிறது. இந்த நிலையில் சிங்கள மொழியை கற்கும் மாணவர்கள் இந்த மொழியை கற்பதற்கு ஆர்வத்தை காட்டுகின்றார்களா? மற்றும் மாணவர்களின் சிங்கள மொழியின் நிலை, அதன் பயன்பாடு என்பவற்றை கண்டறிய இப் பீடத்தை ஆய்வுப் பிரதேசமாக கொண்டும் இரண்டாம் வருட மாணவர்களை மையப்படுத்தி ஆய்வாளர்களால் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

**ஆய்வுப் பிரச்சினை**

மொழி சமூகங்களுக்கிடையில் பரஸ்பர புரிதலுக்கான ஊடகமாக அமைந்துள்ளது. என்ற வகையில் இலங்கை நாட்டின் தேசியமொழியாகவும் அரச கருமமொழியாகவும் கருதப்படுகின்ற சிங்கள மொழி பெரும்பாண்மியனரால் பேசப்படுகின்ற மொழி என்ற வகையில் இந்தமொழிப்புலமை எல்லா சந்தர்ப்பங்களிலும் அவசியப்படுகின்றது. சகவாழ்வு, சமூகங்களுக்கிடையிலான உறவாடல் வழுப்பெற்று இலங்கைநாட்டில் பல்லினமக்களும் நிம்மதியாக வாழவும் மொழியும் அதன்மூலம் பிரச்சினைகளையும் பிரதான தடையாக அமைந்திருக்கிறது என்றவகையிலும், இன்று இஸ்லாம் குறித்த பிழையான புரிதல்களும் விவாதங்களும் பேரினவாதிகளால் ஊடுகடத்தப்படுகின்றது. அதற்கான சரியான பதில்களையும் எதிரவாதங்களையும் முன்வைக்கவேண்டிய தேவையுள்ளது என்ற

அடிப்படையிலும் சிங்கள மொழித்திறன் இன்றிமையாததாது. அவ்வாறே தொழில் சார் அம்சங்களிலும் சிங்களமொழி திறன் முக்கிமானதாக கொள்ளப்படுகின்றது. எனவே இந்த நியாயங்களின் அடிப்படையில் பட்டதாரிகளாக உருவாக இருக்கும் இந்த பல்கழைக்கழக முஸ்லீம் மாணவர்களுக்கு சிங்கள மொழி ஆற்றல் அதனது பயன்பாடு என்பன போதியளவு காணப்படாமை ஆய்வாளர்களது அவதானத்திற்குற்பட்டது. இந்த அவதானத்தின் உண்மை நிலை என்ன? சிங்கள மொழிப்புலமை எவ்வாறு காணப்படுகின்றது? அதன் பயன்பாட்டுவீச்சு என்ன போன்ற கேள்விகளை மையம்கொண்டதாக ஆய்வுப்பிரச்சினை அமைந்துள்ளது

**ஆய்வு நோக்கம்**

- இலங்கை தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழிப் பீடத்தில் சிங்கள மொழிப்பயன்பாட்டு நிலையினையம், சிங்கள மொழித்திறனின் நிலையினையும் கண்டறிதல்.
- மேற்குறித்த நிலைகளுக்கான காரணங்களை அடையாளம்கண்டு அவற்றுக்கான தீர்வுகளை முன்மொழிதல்.

**ஆய்வு முறை**

இவ் ஆய்வினை மேற்கொள்வதற்கு முதலாம் நிலைத் தரவுகளும் இரண்டாம் நிலைத் தரவுகளும் உபயோகிக்கப்பட்டன.

- முதலாம் நிலைத் தரவுகள்
  - வினாக் கொத்து
  - நேர்காணல்
  - அவதானம்
- இரண்டாம் நிலைத் தரவுகள்
  - முன்னைய ஆய்வு வெளியீடுகள்
  - புத்தகங்கள்
  - பத்திரிகைகள்
  - சஞ்சிகைகள்

**ஆய்வு எல்லை**

- தலைப்பு எல்லை : இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழிப் பீடத்தில் சிங்கள மொழிப் பயன்பாடு
- ஆள் எல்லை : இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழிப்பீடத்தில் இரண்டாம் வருட 2017/2018 மாணவர்கள்
  (350 மாணவர்களில் 90% ஆனவர்கள் நம்பிக்கை தரமும் 5% பிழையின் விழிம்பாக கருதி 154க்கு மேற்பட்ட தரவுகளை கொண்டு இந்த ஆய்வினை மேற்கொள்ளப்பட்டுள்ளது.)
- பிரதேச எல்லை (இலங்கை தென் கிழக்குப் பல்கலைக்கழகம் இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழிப்பீடம்)
- கால எல்லை (2019 வருடம்)

**இலக்கிய மீளாய்வு**

கடந்த காலங்களில் இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளை தேடலுக்கு உட்படுத்திய போது சிங்கள மொழி கற்றல் சம்பந்தமாக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் இலங்கை தென் கிழக்குப் பல்கலைக்கழக இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழிப் பீடத்தினை மையமாகக் கொண்டு எந்த ஆய்வும் மேற்கொள்ளப்படவில்லை. மேலும் வேறு சில இடங்களை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட சில ஆய்வுகள் வாசிப்புகுட்படுத்தப்பட்டது.

இரண்டாம் மொழியாக சிங்களம் கற்றல் கற்பித்தல் சிக்கல்களும் தீர்வுகளும் என்ற தலைப்பிற்கு கீழ் ஏ.வினோதினி அவர்களால் ஆய்வொன்றினை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஆய்வில் சிங்களம் கற்றல் கற்பித்தல் சம்பந்தமாக சில காரணங்களை மாத்திரம் இனங் கண்டு ஆய்வு முன்வைக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் முக்கிய காரணியாக சான்றிதழ்களை பெற்றதற்கு பின்னால் மேலும் படிப்பதற்கு ஆர்வம் காட்டாமையும் அதனை பயன்படுத்தாமையும் அடையாளம் கண்டு ஆய்விற்கு உற்படுத்தியுள்ளனர். இந்த ஆய்வானது பிரதேச, காரண மற்றும் சூழல் அடிப்படையிலும் இந்த ஆய்விலிருந்து வேறுபடுகின்றது.

இரண்டாம் மொழியாக சிங்கள மொழியை கற்பதில் எதிர் கொள்ளும் சவால்கள்: சம்மாந்துறைப் பிரதேசத்தை மையப்படுத்திய ஆய்வானது ஏ.எம்.எம்.ஆகில் அவர்களால் மேற் கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஆய்வில் சம்மாந்துறை பிரதேச மக்களின் சிங்கள மொழியில் முன்னறிவின்மையும் கற்றல் உத்திகள் இன்மையும் என்பதை கண்டறிந்து ஆய்விற்கு உட்படுத்தியுள்ளனர். இந்த ஆய்வானது பிரதேச மற்றும் சூழல் காரணிகளின் அடிப்படையில் வேறுபடுகிறது.

இவ்வாறாக மொழி கற்றல் சம்பந்தமாக ஆய்வுகள் மேற் கொள்ளப்பட்டிருந்தாலும் குறிப்பாக இலங்கை தென் கிழக்கு பல்கலைக்கழக இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழிப் பீடம் தொடர்பான எந்தவித ஆய்வுகளும் மேற் கொள்ளப்படவில்லை என்ற வகையில் இவ்வாய்வு முன்னால் கூறப்பட்ட ஆய்வுகளிலிருந்து வேறுபடுகிறது.

**பெறுபேறுகளும் கலந்துரையாடல்களும்**

இந்த ஆய்வின் நோக்கத்தை நிறைவு செய்யும் முகமாக பின்வரும் அம்சங்கள் கருத்திற் கொள்ளப்பட்டது. அதில் இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழிப் பீடத்தில் இரண்டாம் வருட மாணவர்களில் 183 பேரை இவ்வாய்விற்கு உள்வாங்கப்பட்டுள்ளனர். அதன் தரவுகளின் படி இங்கு கல்வி பயிலுகின்ற மாணவர்களில் வெறுமனே 10% மாணவர்கள் மாத்திரமே சிங்கள மொழியில் தேர்ச்சி பெற்றவர்களாகக் காணப்படுகின்றனர். மீதி 54% மாணவர்களுக்கு இப்பாடத்தில் சாதாரண தேர்ச்சியும் அதிலும் 36% சிங்கள மொழியில் மிகவும் பின் தங்கிய ஓர் நிலைப்பாட்டிலேயே காணப்படுகின்றனர். இதனை பின்வரும் வரைபு மூலம் தெளிவாக நோக்கலாம்.





*Figure 1*

இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழிப் பீடத்தில் 21% மாணவர்கள் சிங்கள மொழியினை உபயோகிக்கின்றனர். அதில் 79% மாணவர்கள் சிங்கள மொழியை உபயோகிக்கவில்லை.





*Figure 2*

மேலும் இவ்வாய்வின் போது, மாணவர்கள் தனது சாதாரண தரப் பரீட்சையில் இதனை ஓர் தெரிவுப் பாடமாக தெரிவு செய்திருக்கின்றார்கள். என வினாத்தொகுக்கப்பட்ட போது 42.2% மாணவர்கள் சிங்களத்தை ஓர் பாடமாக கற்கவில்லை என்பது தெரியவந்துள்ளது. இதுவும் ஓர் முக்கிய காரணியாக இங்கு அடையாளம் காணப்பட்டுள்ளது. மேலும் 89.6% மாணவர்கள் சிங்களம் கற்பதில் எந்தவிதமான ஓர் ஆர்வமும் காட்டவில்லை.

இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழிப் பீடத்தில் சிங்கள மொழி மற்றும் சுற்றுலாத் துறை கற்கை எனும் இரண்டும் இணைந்து ஓர் தெரிவுப் பாடமாக காணப்படுவதை கருத்திற் கொண்டு சிங்கள மொழி பாடம் தெரிவு செய்வதில் 38% மாணவர்கள் மட்டுமே காணப்படுகின்றனர். மீதி 62% மாணவர்கள் சிங்கள மொழியை ஓர் பாடமாக தெரிவு செய்யவில்லை. இதனை கீழுள்ள வரைபடம் தெளிவாக காட்டுகிறது.





*Figure 3*

இந்த ஆய்வின் நோக்கமான மாணவர்களின் சிங்கள மொழித் திறனின் நிலையை கண்டறிவதை நோக்கமாக கொண்டு சேமித்த தரவுகள் கீழே தரப்பட்டுள்ளது. அதனை அடிப்படையாக கொண்டு மேலும் சிங்கள மொழியில் வாசிப்பு, எழுத்தறிவு, பேசும் திறன் என்பவற்றிலான தேர்ச்சி மட்டத்தை ஆராயுகையில், வெறுமனே 10% ஆன மாணவர்களுக்கு சிங்கள மொழியில் தெளிவாக வாசிக்க கூடிய ஆற்றலில்லை. 30.8% ஆன மாணவர்களுக்கு எழுதும் திறன் காணப்படவில்லை. மேலும் 37.2% ஆன மாணவர்களுக்கு சிங்கள மொழி மூலமான சிறந்த தொடர்பாடலை மேற்கொள்ள முடியாதுள்ளது. எழுதவும்,பேசவும்,வாசிக்கவும் கூடிய தகைமையற்ற மாணவர்கள் 16.3% காணப்படுகின்றனர். பின்வரும் வரைபினூடாக இதனைக் காணலாம்.

எனவே இலங்கை தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழிப் பீட மாணவர்களது சிங்கள மொழிப்பயன்பாட்டு நிலையும் சிங்கள மொழித்திறனின் நிலையும் குறைவாகவே காணப்படுகின்றது.





*Figure 4*

இலங்கை தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழிப் பீடத்தில் சிங்கள மொழிப்பயன்பாட்டு நிலையும், சிங்கள மொழித்திறனின் நிலையும் குறைவாகவே காணப்படுகின்றது என்ற இந்த ஆய்வின் கண்டறிதலின் படி அந்நிலைகளுக்கான காரணங்களை பின்வருமாறு அடையாளப்படுத்தமுடிந்தது.

**சூழல் காரணி:**

தன்னைச் சூழவுள்ள சூழலே இவர்களுக்கு பெறும் சவாலாக அமைகின்றது. வீட்டுச் சூழலிலும் இம் மாணவர்களுக்கு சிங்கள மொழியை அறிந்து கொள்வதற்கான சந்தர்ப்பம் இல்லை. இதற்கான காரணம் தன் வீட்டுச் சூழல் என 10.8% மாணவர்கள் கூறுகின்றனர்.

**ஆர்வமின்மை** :

பாடசாலையில் கற்பதில் காட்டிய அலட்சியம் என 22.5% மாணவர்கள் கூறுகின்றனர்.

**தொடர்பாடலின்மை:**

நண்பர்களுடனான தொடர்பாடல் இல்லை ஆதலால் மொழி தேர்ச்சி அற்று காணப்படுகின்என 12.8% மாணவர்கள் குறிப்பிடுகின்றனர்.





*Figure 5*

**உறவு விரிசல்:**

பிற மொழிபேசுவோரை விட்டும் தூரமாகுதல். ஆதலால் மொழி தேர்ச்சி அற்று காணப்படுகின்றது என 64% மாணவர்கள் குறிப்பிடுகின்றனர். இவ்வாறு சிங்கள மொழியில் மாணவர்கள் தேர்ச்சியற்று காணப்படுவதற்கு முக்கிய காரணிகள் இவ்வாய்வில் கண்டறியப்பட்டன.

**முடிவுரை**

இலங்கை தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழிப் பீடத்தில் சிங்கள மொழிப்பயன்பாட்டு நிலையினையம், சிங்கள மொழித்திறனின் நிலையினையும் கண்டறிவதனையும் மேற்குறித்த நிலைகளுக்கான காரணங்களை அடையாளப்படுத்துவதனையும் நோக்காகக்கொண்டே ஆய்வ நகர்ந்துள்ளது. ஆய்வுப்பிரதேசமான இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழிப் பீடத்தில் இரண்டாம் வருடத்தில் கற்கும் மாணவர்களினை மையமாகக் கொண்டு வினாக்கொத்து, நேர்காணல் மற்றும் அவதானம் மூலம் பெறப்பட்ட தகவல்களினை கொண்டு பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. அதனடிப்படையில் இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழிப் பீடத்தில் சிங்கள மொழிப்பயன்பாட்டு நிலையும், மொழித்தேர்சி நிலையும் மிகவும் குறைவாக காணப்படுகிறது. அதாவது சிங்கள மொழியில் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் மிகவும் குறைவாக காணப்படுகின்றார்கள். அதுமட்டுமல்லாது சிங்கள மொழி பாடத்தினை இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழிப் பீடத்தில் கற்கும் மாணவர்களின் வீதம் குறைவாக காணப்படுவதோடு அதிகமான மாணவர்கள் சிங்கள மொழியை கற்பதில் அலட்சியம் காட்டக் கூடியவர்களாக ஆய்வாளர்களால் கண்டறியப்பட்டுள்ளது. மேலும் பொருத்தமான சிங்கள மொழி தொடர்பாடல் இன்மையும் அதற்கான காரணியாக சமூகம், பாடசாலை, குடும்பம் மற்றும் நண்பர்களை குறிப்பிடுகின்றனர். இதன் மூலம் இஸ்லாமிய கற்கை மற்றும் அரபு மொழிப் பீடத்தில் சிங்கள மொழிப் பாவனை குறைவாக காணப்படுகின்றது என்ற முடிவு பெறப்பட்டுள்ளது. ஆகவே இவ்வாய்வானது இஸ்லாமிய கற்கைள் மற்றும் அரபு மொழிப் பீடத்தில் சிங்கள மொழிப் பாவனையை முன்னேற்றுவதற்கு மேற் கொள்ளப்படும் முயற்சிகளுக்கும் திட்டங்களுக்கும் இவ்வாய்வு பக்க பலமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**முன்மொழிதல்கள்**

- இரண்டாம் வருடத்தில் இரண்டாம் பருவத்தில் சிங்கள பாடம் ஒரு பாடமாக இருப்பதோடு அது தெரிவு செய்யக் கூடிய பாடமாக இருக்கும் அதேவேலை, கட்டாயப் பாடமாக்கப்படவில்லை. எனவே இரண்டாம் மொழியான சிங்கள பாடத்தை ஒன்று அல்லது மூன்று வருடத்திற்கு கட்டாயப் பாடமாக மாற்ற வேண்டும்.

- மாணவர்களுக்கு சிங்கள மொழியை கற்பிக்கும் பொழுது அனைவரையும் ஒன்றாக வைத்து கற்பிக்காமல் மாணவர்களின் சிங்கள மொழியுடனான பரீட்சயத்திற்கேற்ப குழுக்களாக பிரித்து கற்பிப்பது சிறந்தது.

- ஏழு பிரதான பாடங்களில் எட்டாவதாக சிங்களப் பாடத்தையும் பிரதான பாடமாக சேர்த்துக் கொள்ளப்படல் வேண்டும்.

- பீடத்தில் மொழிப் பெயர்பானது சிறப்புக் கற்கையாக கற்பிக்கப்படுகின்றது, அதில் தமிழ், ஆங்கிலம், அரபு ஆகிய மூன்று மொழிகளும் உள்ளடக்கப்பட்டுள்ளது. இதில் சிங்கள மொழியை இணைத்துக் கொண்டால் சிங்கள மொழி தேர்ச்சி பெற்ற மாணவர்கள் இத் துறையில் சிறப்பு கற்கையை மேற்கொள்ள சந்தர்ப்பமாக அமையும்.

இவ்வாறான செயன்முறைகளை இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழிப் பீட பாடத்திட்டத்தில் சேர்த்துக் கொண்டால் சமூகத்திலும், தொழிற் சந்தையிலும் இலகுவாக முன்னேறிச் செல்லக் கூடியதாக இருக்கும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

**உசாத்துணைகள்**


ஆகில், ஏ.எம்.எம்.(2019). இரண்டாம் மொழியாக சிங்கள மொழியை கற்பதில் எதிர்கொள்ளும் சவால்கள்: சம்மாந்துறைப்பிரதேசத்தை மையப்படுத்திய ஆய்வு.

South eastern university faculty of Islamic studies and Arabic language 6th international symposium 2019 http://ir.lib.seu.ac.lk/handle/123456789/4037

சாதியா,எம்.ஏ.எஸ்.எப்., மபாஸ்,எம்.எஸ்.எம்.(2016).சிங்கள மாணவர்கள் இரண்டாம் மொழியாகத் தமிழை கற்பதில் உள்ள சிக்கல்களும் அவற்றுக்கான தீர்வுகளும் South eastern university Arts Research Session

வினோதினி, ஏ.(2018). இரண்டாம் மொழியாக சிங்களம் கற்றல்-கற்பித்தல் சிக்கல்களும் தீர்வுகளும். South eastern university 8th international symposium 2018 http://ir.lib.seu.ac.lk/handle/123456789/3646

புஞ்சிஹேவா,எஸ்.ஜீ.(2012),சீ.வருநாதன், ச., (மொழிபெயர்ப்பு,2102) கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவின் பரிந்துரைகள்() மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், கொழும்பு.

Madeline E.Ehrman, 1996, Understanding Second Language Learning Difficulties: http://www.amzan.com

O' Malley, J.M.,and Chamot, A.U., Learning Strategies in Second Language Acquisition, Cambridge University Press: Cambridge, 1995.